# 7வது முறையாக தி.மு.க. நிச்சயம் ஆட்சியைப் பிடிக்கும்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...**

முதல் பக்கத் தொடர்ச்சி

1949இல் தொடங்கி, 1957இல்தான் தேர்தல் களத்திற்கே வந்தோம். ஆனால், இன்றைக்குச் சில கட்சிகளைப் பார்க்கிறோம். தொடங்கிய உடனேயே ஆட்சிக்கு வருவோம் என்று சொல்லும் நிலை இன்றைக்கு நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. நாங்கள்தான் அடுத்த ஆட்சி; நாங்கள்தான் அடுத்த முதல்வர் என்று சிலர் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் அது யார்? எப்படிப்பட்டவர்? எந்தக் கட்சி? எந்தக் கட்சித் தலைவர் என்றெல்லாம் சொல்ல விரும்பவில்லை. காரணம், அவர்களையெல்லாம் நான் அடையாளம் காட்டுவதற்குத் தயாராக இல்லை. அதுதான் உண்மை.

அவர்கள் பெயரைச் சொல்லி இந்த மேடைக்குரிய அங்கீகாரத்தை, கவுரவத்தை நான் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதுதான் உண்மை. அதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

நானாக இருந்தாலும் சரி; தம்பி உதயநிதியாக இருந்தாலும் சரி; அண்ணன் துரைமுருகனாக இருந்தாலும் சரி, என்ன சொன்னோம்? மாற்றுக் கட்சி என்றுதான் சொன்னோம். அந்தக் கட்சியின் பெயரைக்கூட சொல்ல எங்கள் வாய் வரவில்லை. எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. எத்தனையோ கட்சிகளின் பெயர்களைச் சொல்கிறோம். ஆனால், இந்தக் கட்சியின் பெயரைச் சொல்ல நாங்கள் மறுப்பதற்கு என்ன காரணம்? உண்மையிலேயே ஒரு அரசியல் கட்சியாக இருந்து மக்களுக்காகப் பாடுபடும் கட்சியாக இருந்து மக்களுக்காக உழைக்கும் கட்சியாக அது இருந்து – உண்மையிலேயே, தமிழர்களுக்காகப் பாடுபடும் கட்சியாக இருந்தால் சொல்லலாம். வேஷமிட்டுக் கொண்டிருக்கும் – ஒரு நாடகத்தை நடத்திக் கொண்டிருப்பவர்களை எல்லாம் நான் அடையாளம் காட்ட விரும்பவில்லை.

**‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு – கூடியிருக்கும் நீங்களே பதில்!**

1949இல் தொடங்கி, 1957இல் முதன் முதலாகத் தேர்தல் களத்தில் நாம் ஈடுபட்டோம். அதிலும் தேர்தல் களத்தில் ஈடுபடலாமா? வேண்டாமா? என்று திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் அண்ணா அவர்கள், அந்த மாநாட்டில் கூடியிருந்த மக்களிடத்தில் வாக்குப் பெட்டியை வைத்து, ஒரு வாக்குச் சீட்டைக் கொடுத்து, அதில் தேர்தலில் 'ஈடுபடலாம்; ஈடுபட வேண்டாம்' என்று எழுதிப் போடுங்கள் என்று சொல்லி, அதற்குப் பிறகு அந்தப் பெட்டியில் இருந்த சீட்டுகளை எண்ணிப் பார்த்து, தேர்தல் களத்தில் ஈடுபடலாம் என்பதை அதிகமான அளவிற்கு எழுதிப் போட்ட காரணத்தினால், தேர்தலில் ஈடுபட்டோம்.

1957 தேர்தலில் 15 இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டோம். அதற்குப் பிறகு, 1962இல் 50 இடங்களில் மேல் வெற்றி பெற்று, எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்தோம். அதைத் தொடர்ந்து, 1967இல் அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றோம். ஆட்சிப் பொறுப்பேற்ற அண்ணா அவர்கள், தொடர்ந்து நீண்ட ஆண்டு காலம் நம்மிடத்தில் வாழ முடியாமல், ஒரு கடுமையான நோய்க்கு ஆளாகி, அதற்காக அமெரிக்காவிற்குச் சென்று அறுவை சிகிச்சை செய்து கொண்டு எல்லாம் வந்தார். ஆனால், நம்மிடத்தில் அவர் தொடர்ந்து வாழ முடியாத நிலைக்கு ஆளாகி, நம்மை எல்லாம் விட்டுப் பிரிந்து விட்டார். அண்ணா மறைவிற்குப் பிறகு, கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றார். கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதலமைச்சராகத் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து, ஆட்சியை நடத்திக் காட்டியிருக்கிறார். அதற்குப் பின்னால், ஆறாவது முறையாக இந்த ஸ்டாலின் – ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்‘ உங்களால் தமிழ்நாட்டு மக்களால் அங்கீகரிக்கப்பட்டு, இன்றைக்கு நான் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்கு நம்முடைய ஆட்சி ‘திராவிட மாடல்’ ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

”திராவிட மாடல் ஆட்சி என்றால் என்ன?” என்று கேட்பவர்களுக்கு, ஒரே ஒரு பதில்... இங்கே கூடியிருக்கும் நீங்கள்தான் பதில். இதுதான் திராவிட மாடல்.

திராவிட மாடல் என்று சொன்னாலே, சிலருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. ஆவேசம் வருகிறது. ஆவேசம் வரட்டும்... கோபம் வரட்டும்... அவ்வாறு சொல்லச் சொல்லத்தான், திராவிட மாடல் என்று நாங்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருப்போம். நீங்கள் சொல்லச் சொல்லத்தான், கழகம் மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. நீங்கள் இவ்வாறு தரக் குறைவாகப் பேசப் பேசத்தான், இன்றைக்கு உங்களிடத்திலிருந்து அனைவரும் இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். பாருங்கள், இந்தக் கூட்டத்தை பார்த்தாலே உங்களுக்கு தெரியும்.

**பிரதமர் மோடிக்கு வேண்டுகோள்! தமிழ்நாட்டு ஆளுநரை மாற்றாதீர்!**

நான் கூட பல நேரங்களில் சொல்வதுண்டு. ஆளுநர் அவர்கள், தேவையில்லாத வேலை எல்லாம் செய்கிறாரே, நம்மை எதிர்த்துப் பேசிக்கொண்டே இருக்கிறாரே திராவிட என்ற சொல்லுக்கு எதிர்ப்பதமாகப் பேசிக் கொண்டிருக்கிறாரே, ஆரியத்திற்கு ஆதரவாகப் பேசிக் கொண்டிருக்கிறாரே, இவ்வாறு மதத்தை மையமாக வைத்து பேசிக்கொண்டு இருக்கிறாரே என்றெல்லாம் வருத்தப்படுவது உண்டு. அவர் பேசட்டும். அவ்வாறு, பேசப் பேசத்தான் நமக்கு ஆதரவு அதிகமாகிறது. அதனால் சில பேர், “கவர்னரை மாற்றுங்கள்... மாற்றுங்கள்” என்று சொல்வார்கள். இதுவரை சட்டமன்றத்தில் நாங்கள் கவர்னரை மாற்றுங்கள் என்று தீர்மானம் போட்டிருக்கிறோமா? அவ்வாறு நாங்கள் தீர்மானம் போடவில்லை. அவர் இருக்க வேண்டும். இருந்தால்தான் தி.மு.க. இன்னும் வளர்கிறது. அடுத்த கவர்னர் உரைக்கும் அவர் சட்டமன்றத்திற்கு வர வேண்டும். ஆளுநர் உரையை நாங்கள் கொடுப்போம். அதைப் படிக்காமல் அவர் வெளியே செல்ல வேண்டும். அதையும் நாங்கள் பார்க்க வேண்டும்; அதை மக்கள் பார்க்க வேண்டும். நான் பிரதமரிடத்திலும், உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களிடத்திலும் இங்கிருந்து ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். தயவு செய்து நீங்கள் கவர்னரை மாற்றவே மாற்றாதீர்கள்! அவரே இருக்கட்டும்!

**படிப்படியாக நாம் நிறைவேற்றும் உறுதி மொழிகள்!**

அதேபோன்றுதான், நீங்கள் யாரை நம்பிச் சென்றீர்களோ, அது வீணாகிவிட்டது என்ற வருத்தத்தோடு வந்திருக்கிறீர்களோ, அவர்கள் இன்னும் அதுபோன்று பேசிக் கொண்டே இருக்க வேண்டும். தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு பேசிக் கொண்டே இருந்தால்தான், மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். மக்கள் யாரும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள். எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் நமது வேலையைப் பார்ப்போம். மக்களிடத்தில் தந்த வாக்குறுதிகளை உறுதிமொழிகளை நம்பி, நம்மிடத்தில் ஆட்சியை ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழிகளை எல்லாம் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

**7வது முறையாகவும் தி.மு.கழகம்தான் ஆட்சிக்கு வரும்!**

நான் தொடர்ந்து வாரத்திற்கு இரண்டு நாட்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று கொண்டிருக்கிறேன். அவ்வாறு செல்கிறபோது, அரசு நிகழ்ச்சிகள் மட்டும் அல்ல; கட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறேன். அரசு நிகழ்ச்சிகள், கட்சி நிகழ்ச்சிகள் மட்டுமல்ல; செல்லும் வழியெல்லாம் சாலையின் இருமருங்கிலும் மக்களைச் சந்திக்கிறேன். பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், முதியவர்கள் வரிசையாக இரண்டு பக்கமும் நின்று கொண்டு என்னை வரவேற்கும் காட்சியைப் பார்க்கிறபோது, மீண்டும் சொல்கிறேன்... நிச்சயமாக ஏழாவது முறையாகவும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சிக்கு வரும் என்ற உறுதியையும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்கிறேன்.

காரணம் என்ன? நம்முடைய சாதனைகளை திட்டங்களை எண்ணிப் பார்க்கிறோம். ஒவ்வொரு வீட்டிலும் நம்முடைய ஆட்சியின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாகப் பயன் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

**மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்! துணை முதல்வர் வழங்கிய உறுதி!**

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், பேருந்தில் இலவசமாக விடியல் பயணம் செய்யலாம். அது ஒரு அருமையான திட்டம். அது தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டம். அதேபோன்று, கலைஞர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதுவும் தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டம். அந்தத் திட்டத்தில் இன்னும் அங்கங்கு குறை இருக்கிறது. நான் இல்லை என்று சொல்லவில்லை. அந்தக் குறையும் இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் தீர்த்து வைக்கப்படும் என்று நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் உறுதி கொடுத்திருக்கிறார்.

அதைத் தொடர்ந்து, அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகள் கல்லூரிக்குச் செல்லும்போது, சிலருக்கு வசதி இல்லாத காரணத்தினால், அவர்கள் படிப்பிற்குச் செல்ல முடியாத சூழ்நிலை வருகிறது என்பதை அறிந்து புரிந்து, அவர்கள் அத்தனை பேரும் கல்லூரிக்கு வர வேண்டும் என்ற உணர்வோடு, மாதாமாதம் ஆயிரம் ரூபாய் ‘புதுமைப்பெண்‘ என்ற திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாணவிகளுக்கு மட்டும்தானா? மாணவர்களுக்குக் கிடையாதா? என்ற ஒரு கேள்வி வந்தது. உடனே மாணவர்களுக்கும் உண்டு, ‘தமிழ்ப்புதல்வன்’ என்ற திட்டத்தில் மாணவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**நமது ‘காலை உணவுத் திட்டம்’ – வெளிநாட்டினரும் பின்பற்றுகிறார்கள்!**

அதேபோல், ‘காலை உணவுத் திட்டம்‘ – அந்தத் திட்டம் என்பது, மதிய உணவுத் திட்டமாக நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்த தியாகராயர் அவர்கள் அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்திருந்தாலும் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அந்தத் திட்டத்தைச் செழுமைப்படுத்தி, விரிவுபடுத்தி இருந்தாலும் மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சத்துணவுத் திட்டமாக அதை மாற்றினாலும் அது உண்மையான சத்துணவாக இருக்க வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் முட்டையோடு கலந்த சத்துணவு தந்தார்கள். இப்போது, மதிய உணவுத் திட்டம் மட்டுமல்ல, மதியம் வழங்கப்படும் திட்டம் மட்டுமல்ல, காலையிலும் ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, காலை உணவுத் திட்டம் என்ற அந்தத் திட்டம் வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பார்த்து இன்றைக்கு பல மாநிலங்கள் மட்டுமல்ல, வெளிநாட்டில் இருப்பவர்களும் அந்தத் திட்டத்தைப் பார்த்து நாங்கள் நிறைவேற்றப்போகிறோம் என்று அது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**தேர்தலின்போது – நமது சாதனைகளை நினைவுபடுத்தினாலே போதும்!**

எனவே, இவ்வாறு பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். எதற்காக இதையெல்லாம் உங்களிடத்தில் சொல்கிறேன் என்றால், இதையெல்லாம் நீங்கள் மக்களிடத்தில் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை வருடம்தான் இருக்கிறது. ஒன்றரை வருடத்தில் தேர்தலைச் சந்திக்கப் போகிறோம். யார் யாரோ, எதை எதையோ பேசிக் கொண்டிருக்கலாம். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. நம் சாதனைகளை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதை நினைவுபடுத்தினாலே போதும். 200 அல்ல, 234 தொகுதிகளிலும் நாம்தான் வெற்றி பெறுவோம் என்ற சூழல் அமையும். அதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்க வேண்டும். அந்தப் பணியை நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

உங்கள் எல்லாம் பார்க்கிறபோது, உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும், அண்ணா அறிவாலயத்திற்கு வந்திருக்கிறீர்கள்; கலைஞர் அரங்கத்தில் குழுமியிருக்கிறீர்கள். இந்த கலைஞர் அரங்கத்தில் திரண்டிருக்கும் உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து, வருக... வருக... வருக... என்று தெரிவித்து, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

## ராஜீவ் காந்தி போன்றோர் – இந்த இயக்கத்திற்குக் கிடைத்திருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன்!

வரவேற்புரையாற்றிய ராஜீவ் காந்தி அவர்கள், சில ஆண்டுகளுக்கு முன்னால், தன்னை இந்த இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு, தொடர்ந்து எப்படியெல்லாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார், கழகத்தினுடைய மாணவரணித் தலைவராகப் பொறுப்பேற்று, அந்தப் பொறுப்பை உணர்ந்து எப்படி உழைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் பல நேரங்களில் பார்த்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன். நம்முடைய மாவட்டச் செயலாளர்கள், நம்முடைய கழகத் தோழர்கள் சொல்லும் அந்தச் செய்திகளை எல்லாம் கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்த இயக்கத்திற்குக் கிடைத்திருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைந்தது உண்டு.

## வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| | மதுரா செந்தில்<br>அதிரடி அல்தாப் |
| சங்கரன்கோயில் - | கவிஞர் தமிழ்தாசன்<br>ஈ. ராஜா, எம்.எல்.ஏ.,<br>டாக்டர் கலை கதிரவன் |
| எழும்பூர் - | செந்தலை கவுதமன்<br>மாண்புமிகு பி.கே. சேகர்பாபு<br>செங்கை தாமஸ் |
| உடுமலைபேட்டை - | இரா. இராஜீவ்காந்தி<br>இல. பத்மநாபன்<br>சேலம் கோவிந்தன் |
| கம்பம் - | காசி முத்து மாணிக்கம்<br>நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,<br>சிங்கை பிரபாகரன் |
| கும்மிடிப்பூண்டி - | கவிஞர் மனுஷ்யபுத்திரன்<br>டிஜெ.எஸ்.கோவிந்தராஜ், எம்.எல்.ஏ.,<br>தமிழ்க்கொண்டான் |
| ஆரணி - | கரூர் முரளி<br>எம்.எஸ். தரணிவேந்தன், எம்.பி.,<br>பேரணாம்பட்டு<br>இராஜேந்திர பிரசாத் |
| துறையூர் - | நந்தனம் நம்பிராஜன்<br>காடுவெட்டி நா. தியாகராஜன், எம்.எல்.ஏ.,<br>சாவல்பூண்டி மா. சுந்தரேசன் |
| மேலூர் - | முனைவர் பொன்னேரி சிவா<br>மாண்புமிகு பி. மூர்த்தி<br>வயலூர் கிருஷ்ணமூர்த்தி |
| மேட்டூர் - | வேலூர் கென்னடி<br>டி.எம். செல்வகணபதி, எம்.பி.,<br>நெய்வேலி தங்கம்<br>லயோலா ராஜசேகர் |
| மார்த்தாண்டம்- | பெருநற்கிள்ளி<br>த. மனோ தங்கராஜ், எம்.எல்.ஏ.,<br>ஆலங்குளம் மரியராஜ் |
| தூத்துக்குடி - | அத்திப்பட்டு சாம்ராஜ்<br>மாண்புமிகு கீதா ஜீவன்<br>இரம்ஜான் பேகம் |
| திருமயம் - | ஆடுதுறை உத்திராபதி<br>மாண்புமிகு எஸ். ரகுபதி<br>ஈகை தனசேகர் |
| உளுந்தூர்பேட்டை - | சைதை சாதிக்<br>தா. உதயசூரியன், எம்.எல்.ஏ.,<br>கம்பம் பாண்டியன் |
| பட்டுக்கோட்டை - | வே. மதிமாறன்<br>க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ.,<br>மதுரை சேவியர் |
| புதுக்கோட்டை - | தஞ்சை கலைமணிபாரதி<br>கே.கே. செல்லபாண்டியன்<br>மங்கலம் பிரபாகரன் |
| தென்காசி - | தமிழ் கா. அமுதரசன்<br>நா. ஜெயபாலன்<br>பூங்காநகர் கண்ணன் |
| விருத்தாசலம் - | சோம. செந்தமிழ்செல்வன்<br>மாண்புமிகு சி.வெ. கணேசன்<br>வேலூர் இரமேஷ் |
| திருவெறும்பூர் - | சென்னை த. அரங்கநாதன்<br>பரிதி இளம்சுருதி |
| திருச்செந்தூர் - | ஆரூர் மணிவண்ணன்<br>மாண்புமிகு அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்<br>திருப்பூர் கூத்தரசன் |
| ஒட்டன்சத்திரம் - | தூத்துக்குடி சரத்பாலா<br>மாண்புமிகு அர. சக்கரபாணி<br>ஆம்பூர் தருமன் |
| புதுச்சேரி - | கந்திலி கரிகாலன்<br>புதுவை ஆர். சிவா, எம்.எல்.ஏ.,<br>குடந்தை ராமகிருஷ்ணன் |
| இராஜபாளையம் - | வரகூர் காமராஜ்<br>மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன்<br>கவிஞர் சிவமுத்து வளவன் |
| தஞ்சாவூர் - | வழக்கறிஞர் சிவ. ஜெயராஜ்<br>துரை. சந்திரசேகரன், எம்.எல்.ஏ.,<br>விசார் க. தமிழரசன் |
| மயிலாடுதுறை - | நாத்திகம் நாகராசன்<br>நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ.,<br>பொள்ளாச்சி சித்திக் |
| உதகை - | பவானி கண்ணன்<br>பா.மு. முபாரக்<br>திருப்பூர் ரஜினி செந்தில்<br>கோவை வில்லவன் |
| திருமங்கலம் - | சேலம் சுஜாதா<br>மு. மணிமாறன்<br>பழனி அப்பாஸ்<br>கடையநல்லூர் இஸ்மாயில் |
| கோபிசெட்டி - பாளையம் | போடி காமராஜ்<br>என். நல்லசிவம்<br>குடியாத்தம் அன்பு<br>ஜெ. வீரமணி |
| அண்ணாநகர்- | பசும்பொன் இரவிச்சந்திரன்<br>நே. சிற்றரசு<br>க. எழிலன் |
| காரைக்கால்- | கோவி. லெனின்<br>எச். நாஜிம்<br>ஆலங்குடி செல்வராஜ் |
| பெரியகுளம்- | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி<br>தங்க. தமிழ்செல்வன், எம்.பி.,<br>கு. வாஞ்சிநாதன் |
| மன்னார்குடி- | மதுரை அலெக்சாண்டர்<br>திருப்பூர் மனோகர்பாபு<br>மன்னை த. சோழராஜன் |

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18

### கே.கே.செல்லப் பாண்டியன் தலைமை! வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில்

## புதுக்கோட்டையில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் மங்களம் பிரபாகரன் – தமிழ் இனியன் சிறப்புரை!

*புதுக்கோட்டை. ஜன 25-*

*புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2025 -சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் திலகர் திடல், புதுக்கோட்டையில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.*

*மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளையசூரியன் வரவேற்புரையாற்றகிறார். மாணவரணி துணை அமைப்பாளர்கள் சே. பிரசன்னா, சிப்காட் சதீஷ்குமார் வாகைப்பட்டி கோ. அண்ணாதுரை, பெ. தெய்வானை, எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், பி.டி. அரசகுமார், அரு.வீரமணி புதுக்கோட்டை விஜயா, வி.என்.மணி, சுப. சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, எம்.எஸ்.அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, பெ. ராஜேஸ்வரி க.மதியழகன், எம். லியாகத் அலி, கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், தவ. பாஞ்சாலன், டாக்டர் செ.குறிஞ்சி வாணன், பூங்கொடி சிவகுமார், எம். செந்தில்குமார், வண்ணை அரங்கநாதன், டாக்டர் அஞ்சுகம் பூபதி, கார்த்திகேயன் வேல்சாமி, மாநகர கழக நிர்வாகிகள் அ.ரெத்தினம், க.நைனா முகம்மது, ப.ரங்கராஜன், மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, சேட் (எ)ஷாஜகான், ஏ.ராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜதுரை, மு.க. அறிவுரை நம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமை கழக பேச்சாளர்கள் தஞ்சை கலைமணி பாரதி மங்களம் பிரபாகரன், இளம் சொற்பொழிவாளர் புதுக்கோட்டை தமிழ் இனியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், என். சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து வெ.முத்துகிருஷ்ணன் மா.தமிழ் அய்யா, ஓ.எஸ்.வெங்கடாசலம், அ.இளங்குமரன், சி.சண்முகம், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன் பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், எம். செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, சி.ஆர். வி.சித்ரா, பேரூர் கழகச் செயலாளர்கள் வை.விஜயகுமார், உமுருகேசன், பி. அண்ணாதுரை, எம்.எல்.ஏ.முகமது ரிஷா, கழக முன்னோடிகள் க.ரங்கராசு, மு.கலியமூர்த்தி, மு.பி.மணி, வை.கோ. ராஜன், திருஞான சம்பந்தம், எம்.எம். பாலு ஆர்.பாலகிருஷ்ணன், இராம.செல்வராஜ், கரம்பக்குடி ஜெகநாதன், ராய. முத்துக்குமார், முன்னாள் மாவட்ட, ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள் மாவட்ட கவுன்சிலர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ், காமு மு.பி.மணி, பி.சின்னையா, மாலா ராஜேந்திர துரை, லதா இளங்குமரன், கல்யாணி மாரிமுத்து, சித்ரா ரவிச்சந்திரன், த.செல்வம், ராஜேஸ்வரி செந்தில்குமார், சாந்தி தங்க சிங்கம், கை. பழனிச்சாமி, ஜெயமீரா ரவிக்குமார், சகுந்தலா வைரவன், எம்.ஏ.எம். இம்தியாஸ், இ.செந்தில் ராஜா, எம்.நைனா முகமது, அணிகளின் அமைப்பாளர்கள் உரக்கடை எம்.கருப்பையா மஜித் முபாரக், சூசை ராஜ், கே.கணபதி, எம்.சுப்பையா டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், அ.பிரபா, செந்தாமரை பாலு, டி.எம். ஆர். ராமமூர்த்தி, பொன். பாரி, வே.ராஜேஷ், வி. என்.எம்.பாலு, வி.ஜி.ஆர். மணிவண்ணன், கவிவேந்தன், சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், ராமசாமி என். வீரய்யா, ராஜா, கா.இளவரசன், தவசுமணி, எம். வேலுச்சாமி, மு.கலைஞர் கருணாநிதி, மு. இளஞ்சேரன் முத்துசாமி, விளாப்பட்டி சிவக்குமார், முகமது அன்சாரி பாசித், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆர்.டி.ராமசாமி, அஸ்ரப் அலி, மணிமொழி மனோகரன், சுப்பிரமணியன், காதர் கனி, சுமோ பாலு, வெற்றிச்செல்வன், வைஆதிமூலம், ரவிச்சந்திரன், ராஜேந்திர சோழன், ஆ.மரிய எட்வின் சுந்தர்ராஜன், பரிமளம், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், மகேந்திரன் , மெஸ் மூர்த்தி, ஆர். செந்தில்குமார், இராம.பாலசுப்பிரமணியன், சின்னையா, டாக்டர் அமானுல்லா, எம்.ஆர். அன்பழகன், எம்.குழந்தை, பா.ஹரிஹரன், கே. கோவிந்தன், டாக்டர் தவ.பா.உதயசூரியன், டாக்டர் பிரபாகர தாஸ், நாகேந்திரன், சி. வெங்கடேசன், தரணி ரமேஷ், சி.சந்திரசேகர், ப.தங்க மணி, கே.மகேந்திரன், ராஜீவ் உத்ராபதி, ஜி. விஸ்வநாதன், ஜினி இளங்கோவன், அரசு வழக்கறிஞர்கள் கே.எம்.முருகேசன், அறிவுடை நம்பி, ரமேஷ், ஆர்.கே.ரமேஷ், குமார், வாகை சேகர், ஆர். கே.தவமணி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைச் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.*

*முடிவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆர்.கே.ரத்ன சபாபதி நன்றி கூறுகிறார்.*